## இலங்கை ஆயுர்வேத மருந்துப்பொருள் கூட்டுத்தாபனம் - 2018

-----------------------------------------------------------------------------------------------

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை ஆயுர்வேத மருந்துப்பொருள் கூட்டுத்தாபனத்தின் (கூட்டுத்தாபனம்) 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து கூட்டுத்தாபனத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கூட்டுத்தாபனம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கூட்டுத்தாபனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கூட்டுத்தாபனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கூட்டுத்தாபனம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கூட்டுத்தாபனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில்

குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கூட்டுத்தாபனத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,
- கூட்டுத்தாபனத்தின் ஆளுகை கூட்டுத்தாபனத்தால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கூட்டுத்தாபனம் இணங்கியிருந்ததா என்பதும்,

- கூட்டுத்தாபனம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- கூட்டுத்தாபனத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| குறித்த நியமங்கள் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 2 | | |
| (i) நியமத்தின் 9 ஆம் பந்தியின் பிரகாரம், இருப்புக்கள் அதன் கிரயம் அல்லது நிகர தேறுகை பெறுமதி ஆகியவற்றில் குறைந்த பெறுமதியிலேயே மதிப்பிடப்பட வேண்டுமென்ற போதிலும் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான முடிவடைந்த இருப்புக்களின் மீதியானது கிரயத்தில் மதிப்பிடப்பட்டிருந்தது. | கருத்து தெரிவிக்க வில்லை | இலங்கை கணக்கீட்டு நியமம் 2 இன் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். இந்த வழுவை நிவர்த்தி செய்த பின்னரே 2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ii) நியமத்தின் 10 முதல் 15 வரையான பந்தியின் பிரகாரம், கொள்வனவு செய்த இருப்புக்கள் தொடர்பான அனைத்து கிரயம், மாற்றல் கிரயம் மற்றும் இருப்புக்களை தற்போதைய நிலைக்கும் இருப்பிடத்திற்கும் கொண்டு வருவதற்கு ஏற்பட்ட ஏனைய கிரயங்கள் என்பன முடிவடைந்த மருத்துப் பொருட்களின் இருப்பு மீதிகளின் கிரயத்தினுள் உள்ளடக்கப்பட வேண்டி இருந்த போதிலும், 2018 ஜனவரி 01 இல் உள்ளவாறான முடிவடைந்த மருந்துப் பொருட்கள் இருப்பின் கிரயமானது கணக்கிடப்பட்டிருந்ததுடன், 2016 ஆம் ஆண்டின் ஒவ்வொரு மருந்துப் பொருளின் கிரயத்துடன் 3 சதவீதத்தை சேர்ப்பதன் மூலம் கணக்கிடப்பட்ட பெறுமதியின் அடிப்படையில் ரூபா 119,683,119 தொகையானது கணக்குகளில் எடுத்துக்கொள்ளப் பட்டிருந்தது. | 2016 ஆம் ஆண்டின் முழுமையான கிரயம் 3 சதவீதத்தால் அதிகரித்திருந்தது மற்றும் இருப்புக்களின் கிரயத்தை 3 3 சதவீதத்தால் அதிகரித்திருக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. | மேலே குறிப்பிட்டுள்ள பிரகாரம் |
| (iii) 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான முடிவடைந்த மருந்துப்பொருள் இருப்பு மீதியில் உள்ளடக்கப்பட்ட இருப்புக்களும் முன்னைய ஆண்டுகளில் | 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளின் வரையறுத்த வேலை பத்திரங்களின் கிரயம் கணினியினுள் மாத்திரம் | இலங்கை கணக்கீட்டு நியமம் 02 இன் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். இந்த வழுவை |

| | | |
|---|---|---|
| உற்பத்தி செய்யப்பட்டவைகளும்அவற்றின் உண்மை பெறுமதியில் பெறுமதியிடப்படாத சந்தர்பங்கள் இருந்தன மற்றும் அதற்கு பதிலாக அது 2018 ஆம் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட மருந்துப்பொருட்களின் பெறுமதியை அடிப்படையாக கொண்டு பெறுமதியிடப்பட்டிருந்தது. | உள்ளிடப்பட்டது. 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளின் உற்பத்தியை குறிப்பிடப்பட்ட உற்பத்தியின் கிரயத்துடன் நேரடியாக அடையாளம் காண முடிந்திருக்க வில்லை. ஏனென்றால் விற்பனை மையங்கள் கணனிமயப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நிவர்த்தி செய்ததன் பின்னரே 2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (iv) பேணப்பட்ட இருப்பு பதிவேடுகளின் பிரகாரம், 2018, திசெம்பர் 31 இல் உள்ளவாறான முடிவடைந்த மருந்துப்பொருள் அலகுகளின் எண்ணிக்கை அல்லது அதன் கிரயம் கணிப்பிடப்பட்டிருக்கவில்லை. அதற்கு பதிலாக, அந்த திகதியில் உள்ளவாறான முடிவடைந்த மருந்துப் பொருள் இருப்பின் பௌதீக ரீதியான மீதியின் கிரயம் ரூபா 91,124,985 தொகையானது கணக்குகளில் எடுத்துக்கொள்ளப்பட்டிருந்த. இதன் விளைவாக, நியமத்தின் 34 ஆம் பந்தியின் பிரகாரம், அந்த திகதியில் உள்ளவாறான இருப்பின் மிகை மற்றும் குறைவுகள் நிதிக்கூற்றுக்களில் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இருப்பின் பெறுமதியாக பௌதீக ரீதியான இருப்பின் பெறுமதியானது உள்ளடக்கப்பட்டது. மிகை மற்றும் குறைவுகளின் மீது ஏற்பட்ட விளைவுகளின் பிரகாரம் கணக்குகளில் எடுத்துக்கொள்ளப் பட்டன. | மேலே குறிப்பிட்டுள்ள பிரகாரம் |
| (v) நியமத்தின் 36 ஆம் பந்தியின் பிரகாரம், 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான முடிவடைந்த இருப்பு மீதியின் கிரயமானது கணக்குகளில் எடுத்துக் கொள்ளப்பட்டிருந்த ரூபா 91,124,985 தொகையை கணக்கிடுகின்ற போது, பயன்படுத்தப்பட்ட கிரயம சூத்திரம், பயன்படுத்தப்பட்ட கொள்கைகள் பௌதீக இருப்பு மீதியின் கிரயத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த ரூபா 6,370,745 தொகையான சேதமடைந்த இருப்பின் கிரயம் என்பன வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நியமத்தின 36 ஆம் பந்தியின் பிரகாரம், 2019 ஆம் ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்களில் அனைத்து வெளிப்படுத்தல்களும் உள்ளடக்கப்பட்டன. | மேலே குறிப்பிட்டுள்ள பிரகாரம் |

| | | | |
|---|---|---|---|
| ஆ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 8 இன் 42 ஆம் பந்தியின் பிரகாரம், வழு ஏற்பட்ட முன்னைய காலப்பகுதியில் முன்வைக்கப்பட்ட ஒப்பிடக்கூடிய தொகைகளை அவர்களின் கண்டுபிடிப்பின் பின்னர் மீள் எடுத்து வைப்பதன் மூலம் கடந்த கால பொருண்மையான வழுக்களை வெளியீடு செய்வதற்கு அதிகாரமளிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் முதல் தொகுப்பில் பின்னோக்கிய நடைமுறையில் சரிசெய்யப்படல் வேண்டும். எவ்வாறாயினும், அவ்வாறு செய்யாமல், 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்றில் 2 உருப்படிகளுக்கு ரூபா 3,256,967 தொகையொன்று சீராக்கப்பட்டிருந்தது. | கருத்து தெரிவிக்கவில்லை. | இலங்கை கணக்கீட்டு நியமம் 8 இன் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். <br><br> இந்த வழுவை நிவர்த்தி செய்த பின்னரே 2019 ஆம் ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டிற்கான பணிக்கொடை செலவுகளாக ரூபா 6,872,474 தொகையொன்று நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த போதிலும் இலங்கை கணக்கீட்டு நியமம் 19 இன் 76 ஆம் பந்தியின் பிரகாரம், இறப்பு விகிதம், ஊழியர் புரள்வு, முன்கூட்டிய ஓய்வு, இயலாமைகள், கழிவு வீதங்கள், மருத்தவ திட்டங்களின் கீழான கோரிக்கை வீதங்கள் மற்றும் மருத்துவ நன்மைகள் போன்ற இயல்பான வளங்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கணக்கீட்டு நியமம் 19 இன் பிரகாரம் 2019 ஆம் ஆண்டுகளுக்கான நிதிக்கூற்றுக்களில் அனைத்து வெளிப்படுத்துல்களும் உள்ளடக்கப் பட்டுள்ளன. | இலங்கை கணக்கீட்டு நியமம் 19 இன் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். இந்த வழுவை நிவர்த்தி செய்த பின்னர் 2019 ஆம் ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஈ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 24 இன் 17 ஆம் பந்தியின் பிரகாரம், கூட்டுத்தாபனத்தில் முக்கிய மேலாண்மை பணியாளர்களுக்கு செலுத்தப்படுகின்ற குறுங்கால ஊழியத்திலிருந்தான நன்மைகளின் பெறுமதி, ஏனைய நீண்டகால நன்மைகளின் பெறுமதி, ஏனைய நீண்டகால நன்மைகளின் பெறுமதி மற்றும் முடிவுறுத்தல் நன்மைகள் என்பன வெளிப்படுத்தப்பட வேண்டி இருந்த போதிலும், அவர்களுக்கு செலுத்தப்பட்ட ஊதியத்தின் பெறுமதி மாத்திரம் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. | முக்கிய மேலாண்மை பணியாளர்களுக்கு செலுத்தப்பட்ட குறுங்கால மற்றும் நீண்டகால நன்மைகள் மற்றும் முடிவுறுத்தல் நன்மைகள் நிதிக்கூற்றுக்களின் 3.9 ஆம் குறிப்பின் கீழ் வெளிப்படுத்தப்பட்டன. | இலங்கை கணக்கீட்டு நியமம் 24 இன் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். இந்த வழுவை நிவர்த்தி செய்த பின்னர் 2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு பிரச்சினை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) மீளாய்வாண்டிற்கான வருமான வரி செலவு மற்றும் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வருமான வரிக்கான ஏற்பாடுகள் என்பன முறையே ரூபா 5,400,891 ஆல் மற்றும் ரூபா 5,326,793 ஆல் மிகைப்படுத்தி கணக்குகளில் எடுத்துக் கொள்ளப்பட்டிருந்தன. | 2018 ஆம் ஆண்டிற்கான வருமான வரி செலவுகளின் சரியான தொகை ரூபா 11,723,197 ஆகவும் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வருமான வரி கணக்கின் மீதிகளின் ஏற்பாடு ரூபா 11,141,005 ஆகவும் இருந்தது. | குறிப்பிடப்பட்ட வழுவை நிவர்த்தி செய்த பின்னர் 2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களை தயாரித்து சமர்ப்பித்தல் வேண்டும். |
| (ஆ) 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான முடிவடைந்த மருந்துப் பொருட்களின் 17 உருப்படிகளின் கிரயம் ரூபா 3,385,881 தொகை மற்றும் கிரயம் கணக்கிடப்பட்டிருக்காத முடிவடைந்த மருந்துப் பொருட்களின் 60 உருப்படிகளுடன் தொடர்பான 21,763 அலகுகளின் கிரயம் என்பன கணக்குகளில் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 17 வகைகளான முடிவடைந்த மருந்துப் பொருட்கள் தொடர்பான கிரயம் ரூபா 3,385,881 தொகை தவறியிருக்கின்றது. | மேலே குறிப்பிட்டுள்ள பிரகாரம் |
| (இ) 2018 செப்தெம்பர் 13 இல் உள்ளவாறான பூர்த்தியாக்கப்பட்ட நிர்மாணிப்பு மீது ஏற்பட்ட ரூபா 2,799,618 தொகை மூலதனமாக்கப்பட்டிருக்க வில்லை மற்றும் அது குறைவேலையாக காட்டப்பட்டிருந்ததுடன் மற்றொரு நிர்மாணிப்பு மீது ஏற்பட்ட ரூபா 1,409,696 தொகையும் மூலதனமாக்கம் செய்யப்படாமல் தொடர்ந்து வரும் செலவொன்றாக கருதி கணக்குகளில் எடுத்துக் கொள்ளப்பட்டிருந்தது. | 2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கின்ற போது இந்த வழு சரி செய்யப்படும். | மேலே குறிப்பிட்டுள்ள பிரகாரம் |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | கூட்டுத்தாபனத்துக்கு சொந்தமான முழுமையான தேய்மானம் செய்யப்பட்ட ஆனால் இன்னும் பயன்பாட்டில் உள்ள 05 மோட்டார் வாகனங்களின் கிரயம் மற்றும் திரண்ட தேய்மானம் என்பன முன்னைய ஆண்டின் புத்தகங்களில் இருந்து பதிவழிப்புச் செய்யப்பட்டிருந்தன. குறிப்பிடப்பட்ட வழுவை நிவர்த்தி செய்ய, ரூபா 3,256,967 தொகையான கிரயம் மற்றும் திரண்ட தேய்மானம் என்பன மீண்டும் கணக்குகளில் எடுத்துக் கொள்ளப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், குறிப்பிடப்பட்ட சொத்துக்கள் மீள் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | மீள் மதிப்பீடு செய்வதற்காக பெருந்தொயையான பணம் செலுத்த வேண்டி இருக்கிறது. | மேலே குறிப்பிட்டுள்ள பிரகாரம் |
| (உ) | மீளாய்வாண்டிற்கான சேமிப்பு வைப்பின் வட்டி ரூபா 314,420 தொகை கணக்குகளில் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கவில்லை. | மேலே குறிப்பிட்டுள்ள பிரகாரம் |

### 1.5.3 இணக்கம் செய்யப்படாத கணக்குகள்

| | விடயம் | நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி | தொடர்புடைய பதிவேடுகளின் பிரகாரம் பெறுமதி | வேறுபாடு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| | | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | | |
| (அ) | விற்பனை வருமானம் | 675.87 | 679.44 | 3.57 | 3 விற்பனை நிலையங்கள் மற்றும் பிராந்திய அலுவலகம் ஒன்றினால் செய்யப்பட்ட கடன் விற்பனைகள் கணக்குகளில் எடுத்துக் கொள்ளப்படவில்லை. | அனைத்து விற்பனைகளும் கணக்குகளில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | நாணயக் கடித கணக்கு- பீப்பிள்ஸ் வங்கி (People's Bank) | 5.15 | 4.08 | 1.07 | நாணயக் கடி கணக்கிற்கும் அட்டவணைக்கும் இடையே வேறுபாடொன்று காணப்பட்டது. | தொடர்புடைய பதிவேடுகளுடன் ஒப்பீடு செய்து நிதிக்கூற்றுக்களில் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | முன்வைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | கடன் பட்டோர்கள் | 190.92 | 190.72 | 0.20 | கருத்து தெரிவிக்க வில்லை. | மேலே குறிப்பிட்டுள்ள பிரகாரம் |
| (ஈ) | தேய்மானம் | 6.05 | 7.44 | 1.39 | இணக்கம் செய்யப்பட்டு 2019 ஆம் ஆண்டில் சரி செய்யப்படும். | மேலே குறிப்பிட்டுள்ள பிரகாரம் |

**1.5.4 கணக்காய்விற்கான ஆவணச் சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமை**

| விடயம் | தொகை | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | ரூபா மில்லியன் | | | |
| கடன் பட்டோர்கள்<br>கடன் கொடுத்தோர்கள் | 110.75<br>31.25 | மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் | மீதிகளை உறுதிப் படுத்துவதற்கான கடிதங்கள் கடன் பட்டோர்களுக்கும் கடன் கொடுத்தோர்களுக்கும் அனுப்பப்பட்டன. ஆனால் பதிலளிக்கவில்லை. | மீதிகள் தொடர்பான உறுதிப்படுத்தலை திருப்பி அனுப்பாத கடன்பட்டோர்கள் மற்றும் கடன் கொடுத்தோர்கள் தொடர்பில் விசேட தேடுதல் மேற்கொள்ளப்பட வேண்டும் மற்றும் அடையாளங்கள் உறுதிப்படுத்தப்பட வேண்டும். |

**1.5.5 பெறவேண்டிய கணக்குகள்**

| கணக்காய்வு பிரச்சனை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 13 பொது துறை நிறுவனங்களிடம் இருந்து 5 ஆண்டுகளுக்கு மேலாக தீர்ப்பனவு செய்யப்படாமல் இருந்த 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான 15 கடன்பட்டோர்களின் மொத்த பெறுமதி ரூபா 2,396,142 தொகையிலிருந்து மீளாய்வாண்டு காலப்பகுதியில் எவ்வித அறவீடும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | தரவுகள் கிடைக்கப் பெறாமை காரணமாக மீதிகளை அறவீடு செய்வது கடினமாக இருக்கின்றது. ஏனென்றால் 2014 ஆம் ஆண்டிற்கு முன்னரான காலப்பகுதிக்கான கடமைகளுக்கு | கடன்களை அறவிடுவதற்கான முறையான நடைமுறையொன்று அறிமுகப்படுத்தப்பட்டு செயல்படுத்தப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| அவற்றில் ரூபா 1,379,850 தொகையான கடன்பட்டோர் மீதிகளுடன் தொடர்பான கடன்பட்டோர்கள் கூட்டுத்தாபனத்திற்கு அறவீடு செய்ய எந்த மீதியும் இல்லை என்று தெரிவித்திருந்தனர். | பொறுப்பாக இருந்த உத்தியோகத்தர்கள் கிடைக்கப் பெறவில்லலை மற்றும் மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | |

**1.5.6 செலுத்த வேண்டிய கணக்குகள்**

| கணக்காய்வு பிரச்சனை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான எழுபத்தி நான்கு செலவு மீதிகளின் மொத்த பெறுமதி ரூபா 20,207,994 தொகை 14 மாத காலப்பகுதிக்கு மேலாக தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | விலைப்பட்டியல்களுக்காக கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டதை உறுதிப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படும். | கடன் கொடுத்தோர் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டு நடைமுறையொன்று அறிமுகப்படுத்தப்பட்டு செயல்படுத்தப்பட வேண்டும். |

**1.6 தற்காலிக முற்பணங்கள்**

| கணக்காய்வு பிரச்சனை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 371(5) இன் பிரகாரம், பெறப்பட்ட முற்பணத்திற்கான வேலையை பூர்தி செய்து பின்னரான 10 நாட்களுக்குள் தற்காலிக துணை முற்பணமானது தீர்ப்பனவு செய்யப்படல் வேண்டும். எவ்வாறாயினும், கூட்டுத்தாபதனத்தின் 6 உத்தியோகத்தர்களுக்கு விநியோகிக்கப்பட்ட ரூபா 99,740 தொகையான 8 தற்காலிக முற்பணங்கள் 2019 மார்ச் 31 வரைக்கும் கூட தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை மற்றும் தாமதம் 10 முதல் 150 நாட்கள் கால வீச்சினை கொண்டிருந்தது. | கருத்து தெரிவிக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 371(5) இன் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்தவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்களின் நிதிப்பிரமாணம் 103 மற்றும் 104 | மீளாய்வாண்டின் போது சேதமடைந்ததாக இனங்காணப்பட்டிருந்த ரூபா 6,370,745 கிரயத்தில், முடிவடைந்த மருந்துப் பொருட்களின் இருப்பு நட்டத்திற்கு பொறுப்பேற்க வேண்டிய நபர்களை அடையாளம் காண்பதற்கு நிதிப்பிரமணாங்களின் பிரகாரம் புலனாய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | கருத்து தெரிவிக்கவில்லை. | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 1.8 வரித் தேவைப்பாடுகளுடன் இணங்காமை

| கணக்காய்வு பிரச்சனை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 84 ஆம் பிரிவின் பிரகாரம், விற்பனை மையத்தின் செலுத்தப்பட்ட வாடகையின் 10 சதவீதத்தை குறித்துக் காட்டும் ரூபா 187,500 தொகை நிறுத்தி வைத்தல் வரியாக கழிக்கப்பட்டு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை. | நிறுத்தி வைத்தல் வரியாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு ரூபா 187,500 இனை அனுப்புவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 1.9 அங்கீகரிக்கப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு பிரச்சனை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) 2007 நவம்பர் 09 இல் நடைபெற்ற பொது முயற்சிகள் மீதான குழுவானது, 1997 ஆம் ஆண்டு முதல் செயற்படுத்தப்பட்ட ஊக்குவிப்பு திட்டத்திற்கு திறைசேரியின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு வழிகாட்டியது. 2019 மார்ச் 28 வரைக்கும் கூட | தற்போதைக்கு உற்பத்தி மற்றும் விற்பனை பிரிவுகளின் இலக்குகளின் சாதனைகளின் அடிப்படையில் ஊக்குவிப்பை கணக்கிடுவதற்கான | அனைத்து பிரிவுகளிலும் இணைக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களின் வினைத்திறனை மேம்படுத்தக் கூடிய வகையில் ஊக்குவிப்பு திட்டமொன்று |

| | | | |
|---|---|---|---|
| | அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை என்ற போதிலும், முன்னைய 5 ஆண்டு காலப்பகுதிகளின் போது செலுத்தப்பட்ட ஊக்குவிப்பு கொடுப்பனவுகளின் மொத்த தொகை ரூபா 366,435,770 ஆகும்.<br>இந்தக் ஊக்குவிப்பு திட்டத்தில் உற்பத்தி கிரயத்தை அடிப்படையாகக் கொண்ட உற்பத்தி ஊக்குவிப்பு வருகைக்கான படிகள், மருத்துவ விடுமுறையின் மீதிக்கான படிகள் மற்றும் உற்பத்தி திறனுக்கான ஊக்குவிப்பு போன்ற 4 வகையான ஊக்குவிப்புக்கள் உள்ளடக்கப்பட்டன.<br>சந்தையில் பணவீக்க நிலைமையில் உற்பத்தி கிரயம் வருடாந்தம் அதிகரிக்கின்றது. இதன் விளைவாக உற்பத்தி ஊக்குவிப்பு வருடாந்தம் அதிகரிக்கின்றது. எனவே இவ்வாறான ஊக்குவிப்பு திட்டம் காரணமாக ஊழியர்களின் வினைத்திறன் அதிகரிக்கலாம் என்று எதிர்பார்க்கமுடியாது.<br>மேலும் உற்பத்தியை மேம்படுத்துவதற்கு நேரடியாக பங்களிப்பு செய்திராத ஊழியர்களுக்கும் சமனான உற்பத்தி ஊக்குவிப்பு தொகை செலுத்தப்படுகின்றது. ஆகையினால், இவ்வாறான பிரிவுகளின் செயல்திறன் மேம்படுத்தலை ஊக்குவிப்பதற்குத் இது தாக்கம் செலுத்தியிருக்கவில்லை. | புதிய நடைமுறையொன்று தயாரிக்கப்பட்டு வருகின்றது. | தயாரிக்கப்பட வேண்டும். மற்றும் முறையான அங்கீகாரத்தை பெற்ற பின்னரே ஊக்குவிப்பானது செலுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | 1987 நவம்பர் 19 முதல் இலங்கை ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனத்தின் உள்சார்ந்த நிருவாகம் மற்றும் நிருவாக பிரமாணங்களை உட்படுத்தி விடுமுறை நடைமுறையொன்று தயாரிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டிருந்தது.<br>எவ்வாறாயினும், குறிப்பிடப்பட்ட விடுமுறை செயல்முறைக்கு பொது திறைசேரியின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. ஆகவே அந்த விடுமுறை நடைமுறைக்கு பதிலாக, 2009 சனவரி முதல் தாபன விதிக்கோவை, நிதிப்பிரமாணங்கள் மற்றும் ஏனைய தொடர்புடைய சுற்றறிக்கைகளை உபயோகிப்பதற்கு 2009 பெப்ரவரி 16 அன்று | விடுமுறைக்கான நடைமுறை மற்றும் ஒழுக்காற்று நடைமுறை தயாரிக்கப்பட்டதுடன் மருந்துவ விடுமுறைக்கான கொடுப்பனவை மேற்கொள்வதற்கான அங்கீகாரத்திற்காக அமைச்சுக்கும் திறைசேரிக்கும் கடிதங்கள் அனுப்பப்பட்டன. அங்கீகாரம் வழங்காவிட்டால் மீள அறவிடப்படும் என்ற அடிப்படையில் | நிதி மற்றும் நிருவாக ஒழுங்குமுறைக்கு முறையான வழிகாட்டுதல் ஒன்று தயாரிக்கப்பட வேண்டியதுடன்,பொது நிர்வாக அமைச்சினதும் பொது திறைசேரியினதும் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். ஒப்புதல் பெறப்படாத விடுமுறை நடைமுறையின் அடிப்படையில் மீதமாக இருக்கின்ற மருத்துவ |

| | | |
|---|---|---|
| பணிப்பாளர்கள் சபை தீர்மானித்திருந்தது. எவ்வாறாயினும், தாபன விதிக் கோவை, நிதிப்பிரமாணங்கள் மற்றும் ஏனைய தொடர்புடைய சுற்றறிக்கைகளை கடைப்பிடிக்காமல் அங்கீகாரம் பெற்றிருக்காத, விடுமுறை நடைமுறையின் விடுமுறைக்காக 2012 ஆம் ஆண்டிலிருந்து 2018 ஆம் ஆண்டு வரை ரூபா 23,151,940 தொகையொன்று உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களுக்கு செலுத்தப்பட்டிருந்தது. | 2018 ஆம் ஆண்டிற்கான மருத்துவ விடுமுறைக்கான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டன. | விடுமுறைக்காக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் மீள அறவீடு செய்யப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 15,672,122 தொகையான மிகை ஆனதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 43,656,859 தொகையானதால் நிதி விளைவுகளில் ரூபா 27,984,737 தொகையான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. செயற்பாட்டு செலவுகள் ரூபா 35,184,513 ஆல் அதிகரித்தமையே இந்த வீழ்ச்சிக்கான காரணமாகும்.

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்களின் போக்கு பகுப்பாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது, மீளாய்வாண்டிற்கான விற்பனை வருமானம் 17 சதவீதத்தால் அதிகரித்திருந்த போதிலும், விற்பனை கிரயம் 30 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. ஏனைய வருமானமும் தேறிய நிதிசார் வருமானமும் முறையே 23 சதவீதத்தாலும் 139 சதவீதத்தாலும் அதிகரித்திருந்ததுடன் மற்றும் செயற்பாட்டு செலவுகள் 40 சதவீதத்தால் அதிகரித்திருந்தன.

### 2.3 விகிதப் பகுப்பாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது, மொத்த இலாப விகிதம் மற்றும் தேறிய இலாப விகிதம் என்பன 6.47 சதவீதத்தாலும் 5.23 சதவீதத்தாலும் மீளாய்வாண்டின் போது குறைந்திருந்தன. மேலும் நடைமுறை விகிதம் மற்றும் விரைவு விகிதம் என்பன முறையே 0.11 சதவீதத்தாலும் 0.05 சதவீதத்தாலும் குறைந்திருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு பிரச்சனை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 7,316,876 ஐ ஏற்படுத்தியுள்ள யுனானி(Unani) மருந்து பொருட்களை கொள்வனவு செய்தல், ரூபா 1,513,456 ஐ ஏற்படுத்தி 2,230 கிலோகிராம்கள் பிளம்னஸ் கொள்வனவு செய்தல் , ரூபா 168,000 ஐ ஏற்படுத்தி 200 கிவோகிராம்கள் தேன் மெழுகுகளை | சிவில் வழக்கொன்றை தாக்கல் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. | அமைச்சின் புலனாய்வு குழுவால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கொள்வனவு செய்தல் மற்றும் 1,995,000 ஐ ஏற்படுத்தி 1,500 கிலோகிராம்கள் கழுவப்படாத குகல்கள் போன்வற்றை கொள்வனவு செய்வது தொடர்பில் கூட்டுத்தாபனத்தின் ஊழியர்களால் திறைசேரி பிரதிநிதிக்கு மேற்கொண்ட துன்புறுத்தல் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட ஆரம்ப புலனாய்வு அறிக்கைகள் 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் போது கூட்டுத்தாபனத்துக்கு பெறப்பட்டிருந்தது. எனினும், குறிப்பிட்ட குழுவால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் 2019 மார்ச் 15 வரையிலும் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர்கள் சேமலாப நிதியச் சட்டத்தின் 10 மற்றும் 16 ஆம் பிரிவின் பிரகாரம் குறித்த காலப்பகுதியினுள் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு பங்களிப்புக்கள் செலுத்தப்பட்டிருக்காமையால் ரூபா 1,312,002 தொகையான மிகையறவீடுகள் 2012 ஆம் ஆண்டிலிருந்து 2017 ஆம் ஆண்டு வரை செலுத்த வேண்டியிருந்தது. | மூலிகைத் தோட்டத்தில் வேலைக்கமர்த்தப்பட்ட தற்காலிக ஊழியர்களிற்கான பங்களிப்புக்கள் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு செலுத்தப்பட்டிருக்க வில்லையொன்பதுடன் ஊழியர் திணைக்களத்தின் பிரேரணைகளின் பிரகாரம் நிலுவைத் தொகை மற்றும் மிகையறவீடுகள் செலுத்தப்பட்டிருந்தது. | ஊழியர்களின் சேமலாப நிதியச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். தாபன விதிக்கோவையின் XLVII ஆம் அத்தியாயத்தின் 8.1 மற்றும் 8.2 ஆம் பிரிவின் பிரகாரம் மிகையறவீட்டிற்கு பொறுப்பாகவுள்ள உத்தியோகத்தர் தொடர்பில் ஒழுக்காற்று அதிகாரசபையால் ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | கூட்டுத்தாபனத்திற்காக சேவையாற்றியிருந்த உத்தியோகத்தரொருவரால் ஓய்வூதியத்திற்காக வேண்டப்பட்டிருந்த கோரிக்கையானது பதவிலிருந்து விலகுவதாக கருதப்பட்டிருந்தது. அதற்கெதிராக தொடுக்கப்பட்ட வழக்கின் தீர்ப்பின் பிரகாரம் ரூபா 719,849 தொகை நட்டஈடாக செலுத்தப்பட வேண்டியிருந்தது. | கூட்டுத்தாபனத்தின் முன்னைய மனிதவளங்கள் முகாமையாளரானவர் 2017 ஆம் ஆண்டின் நட்டஈட்டு ஓய்வூதியம் மீது சேவையை விட்டு செல்வதற்கு வேண்டியிருந்தார். எனினும், பணிப்பாளர்கள் சபையானது இதனை பதவியிலிருந்து விலகுதல் மற்றும் விட்டுச் செல்லலாக கருதியிருந்தது. ஆகையால், நீதிமன்றத்தின் தீர்ப்பின் பிரகாரம் நிலுவையாகவுள்ள | தாபன விதிக்கோவையின் XLVII ஆம் அத்தியாயத்தின் 8.1 ஆம் மற்றும் 8.2 ஆம் பிரிவின் பிரகாரம் ஊழியர் உரிமைகளைப் பாதுகாப்பது தொடர்பில் நடவடிக்கை எடுக்காத உத்தியோகத்தர்கள் |

| | | | |
|---|---|---|---|
| | | சம்பளங்கள் மற்றும் நட்டஈட்டை செலுத்த வேண்டியிருந்தது. | தொடர்பில் ஒழுக்காற்று அதிகாரசபையால் ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | முன்னைய ஆண்டின் போது இடைநிறுத்தப்பட்ட 06 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 932,090 தொகையான கடன் மீதிகளை உத்தரவாதமளிப்போரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | முறையான புலனாய்வினை மேற்கொண்ட பின்னர் ஐந்து ஊழியர்கள் மற்றும் ஒரு உத்தியோகத்தர் 2018 ஆம் ஆண்டு சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்டிருந்ததுடன் அவர்கள் பெற்றிருந்த இடர் கடன்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை என்பதுடன் உத்தரவாதமளித்தோரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | உத்தரவாத மளித்தோரிடமிருந்து அறிவிடுவதற்கு துரித நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | 2016 ஆம் ஆண்டில் இடை தன்னியக்க மருந்து நிரப்பல் இயந்திரம் ரூபா 3,025,650 கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும், அவ் இயந்திரத்தை பயன்படுத்துவதற்கு அவசியமாகவிருந்த மருந்து கெப்சியுல்ஸ்கள்(capsules) 2018 ஒக்தோபரில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இனிவரும் 5 வருடங்களின் தேவைகளிற்காக 3,100,000 மருந்து கெப்சியுல்ஸ்கள் ரூபா 1,516,258 தொகையை ஏற்படுத்தி கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் அவ் இயந்திரமானது 2019 மார்ச் 21 வரையிலும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. இருந்த போதிலும் 2016 ஆம் ஆண்டிலிருந்து 2018 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்காக மருந்து கெப்சியுல்ஸ்களை நிரப்புவதற்காக வெளிவாரி நிறுவனமொன்றிற்கு ரூபா 2,742,256 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | 2019 மார்ச் 30 இல் உள்ளவாறு 438,000 எண்ணிக்கையான மருந்து கப்ஸ்யூஸ்கள் பயன்படுத்தப்பட்டதுடன் அதன் இருப்புக்களானது பெறுகை செய்முறையிலுள்ள காலதாமதத்தால் 2018 ஆம் ஆண்டின் இறுதியில் கூட்டுத்தாபனத்தால் பெறப்பட்டிருந்தது. முன்பிலிருந்து இந்த இயந்திரத்தால் தொடர்ச்சியாக கெப்சியுல்ஸ்களின் உற்பத்தி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | முதலாவது மருந்து நிரப்பல் காப்ஸ்யூஸ்களின் இருப்பானது 2019 ஏப்ரல் 24 இல் வழங்கப்பட்டிருந்தது. ஆகையால், போலி கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்க மாட்டாது. இயந்திரம் மற்றும் மருந்து நிரப்பல் காப்ஸ்யூஸ்கள் முறையான திட்டத்தின் பிரகாரம் பயன்படுத்தப்பட வேண்டும். |
| (ஊ) | பொதுத்துறைக்கு மேற்கொள்ளப்பட்ட கடன் விற்பனைகளிற்கான கடன் நிபந்தனைகள் தயாரிக்கப்பட்டிருக்காததுடன் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 183,766,205 தொகையான பொது துறையின் கடன்களை | பொதுத்துறைக்கு மேற்கொள்ளப்பட்ட விற்பனைகளிற்கான கடன் நிபந்தனைகள் எதிர்காலத்தில் தயாரிக்கப்படும். | பொதுத்துறைக்கு மேற்கொள்ளப்பட்ட விற்பனைகளிற்கான கடன் நிபந்தனைகள் தயாரிக்கப்பட்டு அமுல்படுபடுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அறவிடுவதானது மந்தகமான மற்றும் அற்பமான நிலைமையிலிருந்தது. | | |
| (எ) | தொலைபேசி விற்பனைகளுடன் தொடர்பான கடன் நிபந்தனைகளுக்கு முரணாக கடன் விற்பனைகளை மேற்கொண்டமையில் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட முடிந்திருக்காத மொத்த கடன்மீதி ரூபா 6,710,624 ஆக விருந்தது. | தற்போதைய நிலைமைகளின் பிரகாரம் தேவையான கடன் நிபந்தனைகள் எதிர்காலத்தில் தயாரிக்கப்படும் | தொலைபேசி விற்பனைகள் தொடர்பில் கடன் நிபந்தனைகளை முறையாக திருத்தியமைப்பதற்கும் அனைத்து கடன்களையும் அறவிடுவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 3.2 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு பிரச்சனை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளிற்கு முரணாக தயாரிக்கப்பட்டிருந்த மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தில் திறைசேரி ஏற்பாடுகளிற்கு மட்டுப்படுத்தப்பட்ட நடவடிக்கைகள் மாத்திரம் உள்ளடக்கப்பட்டிருந்தது. கூட்டுத்தாபனத்தின் நிதியத்தால் வழங்கப்பட்ட ஏனைய மூலதன செலவினம் இதனுள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயல் முன்னேற்ற அறிக்கைகள் செயல்நடவடிக்கைத்திட்டத்துடன் இணங்கும் வகையில் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | முன்னுரிமைகளின் அடிப்படையாகக் கொண்டு செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தொடர்ந்துவரும் ஆண்டுகளில் தயாரிக்கப்படும் | குறித்த காலப்பகுதியினுள் சுற்றிக்கையின் பிரகாரம் செயல் நடவடிக்கைத்திட்டம் தயாரிக்கப்பட வேண்டுமென்பதுடன் செயல்நடவடிக்கைத் திட்டத்துடன் இணங்கும் வகையில் செயன்முன்னேற்ற அறிக்கைகள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டிற்கான தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட ரூபா 100 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்திலான 10 மூலதன நடவடிக்கைகளில் 2019 மார்ச் 15 வரையிலும் ரூபா 95 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்திலான 09 நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதற்கு கூட்டுத்தாபனம் தவறியிருந்தது. எனினும் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திறைசேரியிடமிருந்து பெறப்பட்ட பயன்படுத்தப்படாமலிருந்த நிதிகள் ரூபா 80,172,480 ஆகவிருந்தது. | ரூபா 100 மில்லியன் மொத்த மதிப்பிடப்பட்ட செலவினத்திற்கு பதிலாக திறைசேரியிடமிருந்து ரூபா 47 மில்லியன் தொகை மாத்திரம் பெறப்பட்டிருந்தது. ஆகையால் நடவடிக்கைகள் தாமதமாதப்படுத்தப்பட்டதுடன் இப்பொழுது வரை ராசா மருந்துப்பொருள் கூட்டுத்தாபனத்தின் தீர்மானமானது மேற்கொள்ளப் பட்டுவருகின்றது. | முறையாக திட்டத்துடன் பயன்படுத்தப் பட்டிருக்காத திறைசேரியிடமிருந்து பெறப்பட்ட நிதிகளை பயன்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 1969 மே 11 ஆந் திகதிய 14, 853/3 இன் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட விதப்புரைகளின் பிரகாரம் கூட்டுத்தானத்தின் 07 நோக்கங்கள் இருந்தன. அவற்றில் ஆயள்வேத மருந்துப் பொருட்களை உற்பத்தி செய்வதற்காகவும் துய்மையான பாலை சேகரிப்பதற்கான பாற்பண்ணை விவசாயம் செய்தல் ,மருந்துகளை உற்பத்தி செய்வதற்காக தேனை உற்பத்தி செய்வதல், தேனீக்களை வளர்த்தல் மற்றும் உள்நாட்டு கைத்தொழிலாக தேனீ வளர்த்தலை அபிவிருத்தி செய்தல் போன்ற நோக்கங்களை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இப்பொழுது கால்நடை விவசாயம் மற்றும் தேனீ வளர்ப்பிற்காக நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. | கூட்டுத்தானத்தின் பிரதான நோக்கங்களை பூர்த்திசெய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | முடிவடைந்த மருந்துப்பொருட்களுக்காக நியமக்கிரயம் தயாரிக்காமையால் முரண்களானது உண்மைக்கிரயத்துடன் ஒப்பிடப்பட முடியாதிருந்ததுடன் மீட்சி நடவடிக்கைகளும் பிரயோகிக்க முடிந்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் நியாயக் கிரயத்தை தயாரிப்பதற்கு நடவடிக்ககைகள் எடுக்கப்படும். | கிரயத்தை முறையாக மேற்கொள்ளுவதற்காக முறைமையொன்று ஸ்தாபிக்கப்பட்டு அமுல்படுத்தப்பட வேண்டும். |
| (உ) | விசேட மேந்தலைக்கிரய உறிஞ்சல் விகிதமானது ஒவ்வொரு மருந்தின் உற்பத்திக் கிரயத்தை இனங்காண்பதற்காக இணங்கண்டிருக்கவில்லை. அதற்கு பதிலாக மேந்தலைக்கிரயமானது 45 சதவீத மற்றும் 65 சதவீத இரண்டு பிரிப்பின் கீழ் உறிஞ்சப்பட்டது. | ஊழியக்கிரணத்தின் 65 சதவீத விகிதத்தில் மேந்தலைக்கிரயம் உறிஞ்சப்பட்டது. | கிரயத்தை முறையாக மேற்கொள்ளுவதற்காக முறைமையொன்று ஸ்தாபிக்கப்பட்டு அமுல்படுத்தப்பட வேண்டும். |
| (ஊ) | உற்பத்தி திட்டத்தை பூர்த்தி செய்வது தொடர்பில் ஏனைய பிரிவின் செய்முறைக்கான செயலாற்றல் குறிகாட்டிகள் மற்றும் கூட்டுத்தாபனத்தில் சந்தைப்படுத்தல் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு செயலாற்றல் மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | செயலாற்றலின் தகவல்களை உள்ளடக்கிய படிவங்கள் 2018 ஆம் ஆண்டிற்கான செயலாற்றலினை மதிப்பிடுவதற்காக உரிய பிரிவுகளிற்கு சமர்ப்பிக்கப்பட்டது. | ஒவ்வொரு பிரிவின் செய்முறைக்கான செயலாற்றல் குறிகாட்டிகள் அறிமுகப்படுத்தப்பட்டு மீளாய்வு செய்யப்பட வேண்டும். |

| | | | |
| --- | --- | --- | --- |
| (எ) | மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்ட வருடாந்த உற்பத்தித்திட்டத்தின் பிரகாரம் புதிய கண்டுபிடிப்புகள் இல்லாதிருந்த 13 உற்பத்திகளின் எதிர்பார்க்கப்பட்ட வருடாந்த உற்பத்தி 17,291 கிலோ கிராம்கள் மற்றும் 750 மில்லிலீற்றரின் 338,536 போத்தல்களால் அடையப்பட்டிருக்காததுடன் 36 புதிய கண்டுபிடிப்புக்களின் எதிர்பார்க்கப்பட்ட வருடாந்த உற்பத்தி 3,904 கிலோ கிராம்கள் மற்றும் 255,804 அலகுகளால் அடையப்பட முடிந்திருக்கவில்லை. | உள்ளபடியான உற்பத்தி வசதிகள் மற்றும் முன்னறிவுறுத்தல்களை கருத்திற் கொண்டு வருடாந்த உற்பத்தி திட்டம் தயரிக்கப்பட்டதுன் உற்பத்தியின் இலக்கானது சுற்றாடல் நிலைமைகள், மூலப்பொருகளை வழங்குவதிலுள்ள கஷ்டங்கள் மற்றும் காலதாமங்களால் அடையப்பட முடிந்திருக்கவில்லை. எனினும் உற்பத்தியானது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 15.2 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. | நடைமுறையில் சாதகமான இலக்குகளினூடாக இலக்குகளை அடைவதற்கும் மூலப்பொருட்களின் அருமைத்தன்மைக் காக நிரந்தரதீர்வுகளை கண்டுபிடிப்பதற்கும் உற்பத்தி பிரிவின் மனித மற்றும் பௌதீக வளங்னளை முகாமை செய்வதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஏ) | மீளாய்வாண்டிற்கான அரஙாக் துறையின் எதிர்பார்க்கப்பட்ட விற்பனை வருமானத்தில் 15 சதவீதமான 79,984,655 தொகையான வருமானத்தை அடையப்பட முடிந்திருக்கவில்லை. மீளாய்வாண்டின் போது அடைந்திருக்க முடியாதிருந்த அந்த வருமானம் 17 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தி ரூபா 111,927,940 வரை அதிகரித்தது. | வருமானத்தின் நட்டத்தை மீண்டும் அதிகரிப்பதற்காக உரிய பிரிவுகளிற்கிடையில் முறையான ஒருங்கிணைப்பொன்றினூடாக சந்தைப்படுத்தல் திட்டம், உற்பத்தித்திட்டம் மற்றும் பெறுகைத்திட்டத்தை தயாரித்து சந்தை கேள்வியுடன் இணங்கும் மூலப்பொருட்களை இனங்கண்டு வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | பொருத்தமான மதிப்பீடுகளை தயாரிப்பதற்கும் எதிர்பார்க்கப்பட்ட விற்பனை வருமானத்தை அடைவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஐ) | மீளாய்வாண்டிற்கான தனியார் துறையின் எதிர்பார்க்கப்பட்ட வருமானத்தில் அடையப்பட முடியாதிருந்த வருமானமானது 67 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 256,076,592 ஆகவிருந்தது. மீளாய்வாண்டின் போது அடையப்பட முடியாதிருந்த அத்தகைய வருமானமானது 34 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தி ரூபா 81,110,128 இற்கு குறைவடைந்தது. எனினும் 2018 ஆம் ஆண்டிற்கான தனியார் துறையின் எதிர்பார்க்கப்பட்ட வருமானமொன்று 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 38 சதவீதத்தை பிரதிநிதித்துப்படுத்தி ரூபா 144,844,500 ஆல் குறைவாக மதிப்பிடப்படுகின்றமை | மேலே குறிப்பிட்டுள்ள பிரகாரம் | மேலே குறிப்பிட்டுள்ள பிரகாரம் |

| | | | |
|---|---|---|---|
| | அரசாங்கதுறைக்கு மேற்கொள்ளப்பட்ட விற்பனைகள் தனியார் துறைக்கு மேற்கொள்ளப்பட்ட விற்பனையாக அறிக்கையிடப்படுகின்றமை, மருத்துவ சேவைகளை வழங்குவதன் மூலமான வருமானமானது விற்பனை வருமானமாக அறிக்கையிடப்படுகின்றன. குறிப்பிடப்பட்ட குறைவிற்கு தாக்கமளித்திருந்தது. | | |
| (ஒ) | 2018 யூன் மாத்திலிருந்து 2018 செப்தெம்பர் வரையிலும் 4 மாதங்களிற்கான 6 விற்பனை நிலையங்களால் பொதுத்துறைக்கு விற்பனை செய்யப்பட்ட மருந்து பொருட்களின் விற்பனை பெறுமதி ரூபா 13,005,072 ஆகவிருந்தது. அதில் ரூபா 11,819,420 தொகையானது தனியார் துறைக்கு விற்கப்பட்ட மருந்து பெருட்களின் பெறுமதியாக தவறுதலாக அறிக்கையிடப்பட்டதுடன் அந்த தகவல்களை அடிப்படையாக கொண்டு பொறுப்பாகவுள்ள உத்தியோகத்தர்களுக்கு கொடுக்கப்பட்ட மாதாந்த இலக்குகள் அடையப்பட்டிருந்தது என்பதை காட்டுவதற்கான ஆவணங்கள் தயாரிக்கப்பட்டிருந்தன. | சந்தைப்படுத்தல் பிரிவானது அரச துறை விற்பனை வருமானத்தையும் மருத்துவ சேவைகளின் வருமானத்தையும் தனித்தனியாக காட்டுவதற்காக அறிவுறுத்தப்பட்டிருந்தது. | பொதுத்துறை மற்றும் தனியார்துறைக்கு விற்கப்பட்ட மருந்து பெருட்களின் விற்பனை பெறுமதி சரியாக அறிக்கையிடப்படடே வண்டும். போலியான அறிக்கைகளை தயாரிப்பதன் மூலம் மாதாந்த இலக்குகளை அடைந்தமையை நிரூபிப்பதற்கு பொறுப்பாகவுள்ள உத்தியோகத்தர்கள் முயற்சிசெய்தனர். அந்த நடத்தையை தவிர்ப்பதற்காக எச்சரிக்கப்பட வேண்டும். |
| (ஓ) | பொதுத்துறைக்கு 164 உற்பத்தி வகைகளில் 260,427 அலகுகள் மற்றும் 407,243 மில்லிமீட்டர்களின் வழங்கல்கள் பூர்த்தி செய்யப்பட்டிராமை காரணமாக மீளாய்வாண்டின் போது கூட்டுத்தாபனம் ரூபா 78,372,900 வருமானத்தை இழந்தது. அவ்வாறு முன்னைய ஆண்டில் இழந்த வருமானம் ரூபா 106,695,025 ஆகும். விற்பனைகளை மேம்படுத்தும் முயற்சி இல்லாமல் பொதுத்துறையிடம் இருந்து பெறப்பட்ட கேள்விகளை பூர்த்தி செய்ய முடியாது என்பதன் காரணமாக குறித்துரைக்கப்பட்ட சந்தை பங்கு காணாமல் போவதற்கான இடரொன்று காணப்பட்டது. | இழந்த வருமானத்தை மீண்டும் அதிகரிப்பதற்காக தொடர்புடைய பிரிவுகளை முறையான ஒருங்கிணைப்பதன் மூலம் சந்தையின் கேள்விக்கு ஏற்ற தொகையினை வழங்கல் செய்ய சந்தைப்படுத்தல் திட்டம், உற்பத்தி திட்டம், மற்றும் பெறுகைத் திட்டத்தை தயாரிப்பதற்கும் மூலப்பொருட்களை அடையாளம் காண்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | விற்பனைகளை மேம்படுத்தும் முயற்சி இல்லாமல் பூர்த்தி செய்ய முடியுமாறு பொதுத் துறையின் குறித்துரைக்கப்பட்ட சந்தைப் பங்கினை பாதுகாக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஔ) | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான காலாவதியான முடிவடைந்த மருந்துப் பொருட்கள் இருப்பின் கிரயம் ரூபா 96,659 ஆக இருந்த போதிலும், 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளுக்கான காலாவதியான இருப்பின் கிரயம் ரூபா 1,949,672 ஆக இருந்தது. 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான குறிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 6,370,745 வரை அதிகரித்திருந்தது. | காலாவதியான இருப்புக்களை பரிசோதனை செய்ய ஏற்கனவே குழுவொன்று நியமிக்கப்பட்டது. | காலாவதியாகும் இருப்புக்களுக்கு பொறுப்பான கட்சியினரை அடையாளம் காண்பதற்கு நிதிப்பிரமாணம் 102 முதல் 105 வரையிலான ஒழுங்குமுறைகளின் பிரகாரம் தேவையானக நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (க) | களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள உலர்ந்த மருந்துப் பொருட்களின் தரத்தை பாதுகாப்பதற்கு ஒரு பொருத்தமான நடைமுறையொன்று இனங்காணப்பட்டு செயல்படுத்தப்பட்டிருக்கவில்லை. நிதிப்பிரமாணங்கள் 763 இன் பிரகாரம், களஞ்சிய நீதியமைப்பினை தயாரிக்கவும் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ளவும் நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. மருந்துப் பொருட்களின் மிகை களஞ்சியப் படுத்தலின் விளைவாக அதிகமான இருப்புக்கள் அழிவடைகின்றன. அழிவடைந்த இருப்புக்கள் அகற்றப்படுவதில்லை, நல்ல இருப்புக்களுடன் சேர்த்து அழிவடைந்த இருப்புக்களும் களஞ்சியப்படுதப்படுகின்றமை போன்றவை இடம்பெற்றன. உலர்ந்த மருந்துப் பொருட்கள் திருப்திகரமாக களஞ்சியப் படுத்தப்பட்டிருக்கவில்லை. களஞ்சியங்கள் சுத்தமில்லாமல் மோசமான நிலைமையில் இருந்தன. | நீதிமன்றங்களில் இருந்து பெறப்பட்ட மருந்துப் பொருள் வகைகள் தேவைக்கு அதிகமாக களஞ்சியப்படுத்தப்பட்டன. அழிவடைந்த மருந்துப் பொருட்களை அவற்றை பரிசோதனை செய்ததன் பின்னர் களஞ்சியத்திலிருந்து அகற்றுவதற்கு முறையான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதுடன் களஞ்சியங்கள் மிகவும் பழையதாக இருந்தால் புதுப்பித்தல் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. மற்றும் களஞ்சியங்கள் உலர்ந்த மருந்துப் பொருட்களை களஞ்சியப்படுத்தக் கூடியதாக தயாரிக்கப்பட்டன. இந்த நேரத்தில், பிளம்ஸ், பழுப்பு சர்க்கரை மற்றும் தேன் என்பன உலர் மருந்துப் பொருள் களஞ்சியங்களில் இருந்து அகற்றப்பட்டு புதிய களஞ்சிய தொகுதியில் களஞ்சியப்படுத்தப்பட்டன. | உலர் மருந்துப் பொருட்களின் தரத்தை பாதுகாக்க கூடிய வகையில் களஞ்சிய கட்டுப்பாட்டு முறைகள் ஸ்தாபிக்கப்பட்டு பேணப்பட வேண்டும். களஞ்சிய நெறிமுறை அமைப்பு தயாரிக்கப்பட வேண்டியதுடன் திறைசேரியிடம் இருந்து அங்கீகாரம் பெறப்பட வேண்டும். |

### 3.3 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாடுடைய ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்

| | கணக்காய்வு பிரச்சனை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | விஜேராம விற்பனை மையத்திற்காக 1996 முதல் வாடகைக்கு எடுக்கப்பட்ட 3 மாடி கட்டிடத்தின் தரைத்தளம் மாத்திரம் பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், 1996 முதல் 2018 திசெம்பர் 31 வரையிலான காலப்பகுதியின் போது கட்டிடத்திற்காக ஏற்பட்ட மொத்த வாடகை ரூபா 16,695,000 இல் ரூபா 11,130,000 தொகையானது பலனற்ற செலவொன்றாக இருந்தது. | விஜேராம விற்பனை மையத்தின் 2 தளங்களில் காணப்பட்ட சேதமடைந்த இருப்புக்கள் ஏற்கனவே அகற்றல் செய்யப்பட்டதுடன் இந்த 2 தளங்களில் ஆயுர்வேத பஞ்சகர்ம மையமொன்றை மருத்துவ உத்தியோகத்தரொருவரின் மேற்பார்வையின் கீழ் பொருளாதார நடவடிக்கையொன்றாக தொடங்குவதற்கு திட்டமிடப்பட்டது. மற்றும் அதனுடன் ஒரு கஞ்சி விற்பனை மையத்தை தொடங்குவதற்கும் திட்டமிடப்பட்டது. | கட்டிடத்தை வினைத்திறனாக பயன்படுத்தக்கூடிய வகையில் முறையான நடைமுறையொன்றை ஸ்தாபித்து உடனடியாக செயல்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | காலி மற்றும் மாத்தறை விற்பனை மையங்களை நடாத்துவதற்காக முறையே ரூபா 60,000 மற்றும் 50,000 ற்கு மாதாந்த வாடகைக்கு எடுக்கப்பட்டிருந்த இரண்டு கட்டிடங்களினதும் மேல்தளங்கள் உபயோகமற்றதாக காணப்பட்டன. | சாத்திய ஆய்வொன்றிற்கு பின்னர் மருந்தகமொன்றை தொடங்குவதற்கு அல்லது விற்பனை மையங்களை குறைந்த கிரயத்துடனான ஒரு இடத்திற்கு மாற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | மேலே குறிப்பிட்டுள்ள பிரகாரம் |

### 3.4 பெறுகை முகாமைத்துவம்

| | கணக்காய்வு பிரச்சனை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அரச பெறுகை வழிகாட்டியின் வழிகாட்டல் 4.2.1 மற்றும் 4.2.2 இன் பிரகாரம் பிரதான பெறுகை திட்டம் மற்றும் பெறுகை நேர அட்டவணை என்பன தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகைத் திட்டத்தை முறையாக தயாரிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | அரச பெறுகை வழிகாட்டியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது ரூபா 49,492,806 மதிப்பிடப்பட்ட கிரயத்தில் எண்ணை மற்றும் திரவ மருந்துப் பொருட்கள் என்பன, வரையறுக்கப்பட்ட விலைமனுக்களுக்கு அனுமதிக்கப்பட வேண்டிய குறைந்த பட்ச 21 நாட்களை | மேற்கோள்கள் குறைந்த பட்ச காலத்தில் அழைக்கப்பட்டிருந்த போதிலும், மேற்கோள்களை அழைக்கும் எதிர்கால | மேலே குறிப்பிட்டுள்ள பிரகாரம் |

| | | | |
|---|---|---|---|
| | அனுமதிப்பதற்கு பதிலாக, மேற்கோள்களை அழைப்பதற்கு 8 நாட்களை அனுமதித்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. விலை மனுவை திறப்பதற்கான அறிக்கைகள் பேணப்படவில்லை மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவின் உறுப்பினர்களிடமிருந்து தொடர்புடைய தரப்பினருடன் எவ்வித தனிப்பட்ட உறவும் இல்லை என்பதை நிரூபிப்பதற்கான அறிக்கைகள் மற்றும் நம்பிக்கைக்கான அறிக்கைகள் பெற்றுக் கொள்ளப்படவில்லை.<br>செயலாற்றுகை பிணை முறி பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை மற்றும் முறையான உடன்படிக்கையொன்றும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.<br>மேலும், ஒப்பந்த நிபந்தனைகளின் பிரகாரம் ரூபா 725,052 தொகையான சேதமடைந்த இழப்புக்கள் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை மற்றும் வழங்கல் செய்யப்பட்ட 3 வகையான எண்ணைகளின் தரம் நியமத்தில் இல்லை என்பது தெரியவந்தது. | நிகழ்வுகளில் தகுந்த காலத்தை அனுமதிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். மேற்கோளின் நிபந்தனைகளுடன் அவர்கள் இணங்கினார்கள் என்பதை உறுதிப்படுத்த கையொப்பங்கள் பெறப்பட்டன. ஏனென்றால் ஒவ்வொரு வழங்குனருடனும் உடன்படிக்கைகளில் கையொப்பமிடுவது கடினமாகும். பரிசீலனைகள் மேற்கொள்ளப்படுவதுடன் மருத்துவ உத்தியோகத்தர்களினால் அறிக்கைகள் சமர்பிக்கப்படுகின்றன. | |
| (இ) | அரச பெறுகை வழிகாட்டியின் வழிகாட்டல் 3.8.1(அ) இல் காட்டப்பட்டுள்ள விதி விலக்கான நிலைமைகளின் கீழ் குறிப்பிடப்பட்ட நடவடிக்கைகளை கருத்தில் கொள்ள முடியாது என்றிருந்த போதிலும், கூட்டுத்தாபன முற்றங்களில் பிணைப்புக் கற்களை அமைப்பதற்கான ஒப்பந்தத்திற்காகவும் மற்றும் அவசரகால பெறுகை முறையை பின்பற்றி வடிகால் முறைமையை புதுப்பிப்பதற்காகவும் ஒப்பந்தக்காரராக அரச பொறியியல் கூட்டுத்தாபனம் தெரிவு செய்யப்பட்டது.<br>ஒப்பந்தக்காரரினால் தயாரிக்கப்பட்ட ரூபா 6,628,735 தொகையான மதிப்பீட்டின் செல்லுபடியாகும் நிலை உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.<br>மற்றும் குறிப்பிடப்பட்ட மதிப்பீட்டின் அடிப்படையில் மீளாய்வாண்டின் போது ரூபா 6,472,556 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது.<br>விபரக்குறிப்புக்களினால் வேண்டப்பட்ட நடைபாதை கற்களின் சாதாரண அழுத்த வலிமையை உறுதிப்படுத்தாமல் செலுத்தப்பட்ட ரூபா 4,245,740 தொகை அதில் உள்ளடக்கப்பட்டிருந்தது. | தற்போதைக்கு, குறிப்பிடப்பட்ட வேலை பூர்த்தியடைந்த பின்னர் 10 மாதங்கள் கடந்திருந்த போதிலும், அமைக்கப்பட்ட பிணைப்புக் கற்களில் எவ்வித சேதமும் ஏற்படவில்லை மற்றும் வேலை திருப்தியான தரத்தில் இருந்தது. | அரச பெறுகை வழிகாட்டியின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். அவசியமான பரிசீலனைகளை மேற்கொண்டதன் பின்னர் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | ஆலோசகர்களை தெரிவு செய்வதற்கான அரச பெறுகை வழிகாட்டியின் வழிகாட்டல் 3.13.2 இன் ஏற்பாடுகளை பின்பற்றாமல் உற்பத்தி ஆலையின் பிரதான கூரையை புதுப்பிப்பதற்கான ஆலொசனை சேவையை வழங்குவதற்கான ஒப்பந்தம் ரூபா 30,245,000 மொத்த கிரயத்தில் இலங்கை பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. விபரக்குறிப்புக்களில் மாற்றங்களை மேற்கொள்வதற்காக விலைமனுதாரர்களால் மேற்கொள்ளப்பட்ட முன்மொழிவுகளின் பிரகாரம் பெறுகை செய்யும் நிறுவனத்தின் தேவைப்பாடுகளில் ஏதேனும் மாற்றங்கள் இருந்தால் அனைத்து விலைமனுக்களும் நிராகரிக்கப்பட வேண்டியதுடன் பெறுகையானது மீண்டும் தொடங்கப்படல் வேண்டும். அதற்கு முரணாக தேவையான விபரக்குறிப்பு துத்த நாகம்/ அலுமினியக் கூரையாக இருந்த போதிலும், ரூபா 25,295,577 தொகையான குறைந்த விலை மனுவை சமர்ப்பித்திருந்த விலைமனுதாரரால் முன்வைக்கப்பட்டிருந்த மாற்று முன்மொழிவினால் சான்ட்விச் கூரை பேனல் (Sandwich Roof Panel) முறை வரை தேவைப்பாடு மாற்றப்பட்டிருந்தது. மற்றும் குறிப்பிட்ட விலை மனுவை ரூபா 30,244,767 வரை அதிகரிதப்பதன் மூலம் குறிப்பிட்ட விலைமனு அங்கீகரிக்கப்பட்டிருந்தது. ஆலோசகர்களினால் உறுதிப்படுத்தப்படாமல் ஒப்பந்தக்காரருக்கு ரூபா 8,105,358 இடைக்கால கொடுப்பனவாக செலுத்தப்பட்டிருந்தது. | 6 சதவீதம் ஆலோசனை கட்டணங்கள் உள்ளடங்களாக ரூபா 36,570,149 தொகையான மதிப்பீடு இலங்கை பொறியியல் கூட்டுத்தாபனத்தால் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், இது தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவால் 2 சதவீதம் ஆலோசனை கட்டணங்களாக ரூபா 27,251,281 வரை திருத்தப்பட்டது,பெறுகை குழு திருத்தப்பட்ட பொறியியல் மதிப்பீட்டை அங்கீகரித்தது, தொழில்நுட்ப ரீதியாக ஏற்றுக்கொள்ளக் கூடிய மிகக் குறைந்த விலையில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த விலைமனு தொழில் நுட்ப மதிப்பீட்டுக் குழுவால் பரிந்துரைக்கப்பட்டது. திருத்தப்பட்ட பொறியியல் மதிப்பீட்டிற்கு மிகவும் நெருங்கி விலையொன்று இருந்தது, இது பொறியியல் கூட்டுத்தாபனத்தால் முன்னர் தயாரிக்கப்பட்ட பொறியியல் மதிப்பீட்டை விட ரூபா 8,745,015 குறைவான பெறுமதியை கொண்டது. இடைக்காலக் கொடுப்பனவுகள் சமர்ப்பிக்கப்பட்ட விலைப்பட்டியல் மற்றும் நிறைவேற்றப்பட்ட வேலையினை பரிசீலித்ததன் பின்னரான திருப்தியுடன் பரிந்துரைக்கப்பட்டது. உயர் முகாமையின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் இடைக்கால கொடுப்பனவுகளுக்கான பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படும். | மேலே குறிப்பிட்டுள்ள பிரகாரம் |

## 3.5 மனிதவளங்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு பிரச்சனை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பணிப்பாளர்கள் சபையினதும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினதும் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ளாமல் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளடக்கப்பட்டிருக்காத பாதுகாவலர் பதவிக்கு நிரந்தன நியமனத்தின் அடிப்படையில் ஒன்பது நபர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்தனர். மற்றும் 2015 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியின் சம்பளங்கள் மற்றும் படிகளாக ரூபா 15,140,829 மொத்த தொகை செலுத்தப்பட்டிருந்தது. | நிரந்தர நியமனத்தின் அடிப்படையில் பாதுகாவலர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு எழுத்து மூல வேண்டுகோளொன்று மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அது பெற்றுக் கொள்ளப்படவில்லை. மற்றும் பதவி தனிப்பட்டது என்பதனால் ஏற்கனவே கிடைத்த 9 பாதுகாவலர்களும் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டனர். அந்த பதவிகளுக்குரிய புதிய நியமனங்களை மேற்கொள்ள கூட்டுத்தாபனத்திற்கு எந்த ஆற்றலும் இல்லை, அந்த 9 நபர்களின் சேவை அத்தியவசியமானது என்பதால் குறிப்பிட்ட பதவியை வைத்து இந்த சேவை மேலும் பெறப்பட்டது. | தாபன விதிக் கோவையின் XLVII ஆம் அத்தியாயத்தின் பிரிவு 8.1 மற்றும் 8.2 இன் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளடக்கப் பட்டிருக்காத பதவிகளுக்கு ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்ளுதல் மற்றும் சம்பளங்களை கொடுப்பனவு செய்தல் ஆகியவற்றுக்கு பொறுப்பான உத்தியோகத்தர்கள் தொடர்பில் ஒழுக்காற்று அதிகாரசபையால் ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளாமல் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை மிகைத்து நிரந்தர அடிப்படையில் நான்கு பொறுப்பான உத்தியோகத்தர்கள் மற்றும் 2 பொதி செய்தல் பரிசோதகர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான சம்பளங்கள் மற்றும் படிகளாக ரூபா 2,652,744 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது. | அந்த உத்தியோகத்தர்கள் புதிதாக திறக்கப்பட்ட 4 விற்பனை மையங்களுடன் இணைக்கப்பட்டனர். அந்த நேரத்தில் அங்கீகரிக்கப்பட்ட எல்லையை மிகைத்ததாக 2 மாத்திரம் இருக்கின்றது. | மேலே குறிப்பிட்டுள்ள பிரகாரம் |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் எல்லையை மிகைத்த 5 பதவிகளுக்கு பதில் கடமையின் அடிப்படையில் பதவிக்கான தகுதியை பெற்றிருக்காத ஐந்து உத்தியோகத்தர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிரந்தனர். மற்றும் மீளாய்வாண்டின் போது பதில் கடமை படிகளாக ரூபா 212,712 மொத்த தொகை செலுத்தப்பட்டிருந்தது. | பதில் கடமை பதவிகள் தொடர்பாக பணிப்பாளர்கள் சபைக்கு அறிக்கையொன்றை சமர்ப்பிக்கவும் தீர்மானங்களை செயற்படுத்தவும் நடவடிக்கைகள் எடுக்கப்படும். | மேலே குறிப்பிட்டுள்ள பிரகாரம் |
| (ஈ) | பதவியின் ஆட்சேர்ப்பு திட்டத்தின் பிரகாரம் பிரகாரம், மனித வள முகாமைத்துவம்/ சட்டம் / வியாபார முகாமைத்துவம் போன்ற பட்டத்தை அடிப்படை தகுதியாக கொண்டிருக்க வேண்டிய உதவி பொது முகாமையாளர் பதவிக்கு (நிர்வாகம் மற்றும் மனிதவளங்கள்) தகுதியை பெற்றிருக்காத கலைப்பட்டதாரி ஒருவர் மாதாந்தம் ரூபா 81,670 சம்பளத்துடன் 2017 ஆம் ஆண்டில் குறிப்பிட்ட பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்தனர். | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நேர்முகத் தேர்வு குழுவில் உள்ளடக்கப்பட்டிருந்தனர் நிறுவனத்தின் தேவையின் பிரகாரம் பதவிக்கு தொடர்புடைய அடிப்படை பட்டத்திற்கு பதிலாக ஏதாவது ஏனைய பட்டங்களை கருத்தில் கொள்வதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து அங்கீகாரம் பெறப்பட்டது. | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்டிருந்த ஆட்சேர்ப்பு நடைமுறையின் தகுதிகளின் பிரகாரம் ஒவ்வொரு பதவிக்கும் ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். தேவைப்பாடுகளின் பிரகாரம் ஆட்சேர்ப்புத் திட்டம் திருத்தப்பட வேண்டும். |
| (உ) | ஆட்சேர்ப்புத் திட்டத்தின் பிரகாரம் பதவிக்கான சேவை அனுபவத்தை நிறைவு செய்திருக்காத இரண்டு உத்தியோகத்தர்கள் 2017 ஆம் ஆண்டில் ஒருவருக்கு மாதாந்தம் ரூபா 53,175 சம்பளமொன்றுடன் முகாமையாளர் (திட்டமிடல்) மற்றும் முகாமையாளர் (வழங்கல்கள்) பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்தார். | தொடர்புடைய துறையில் எவ்வித அனுபவமும் இல்லாதிருந்த போதிலும், நேர்முகத் தேர்வில் காட்டப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் திறன்களின் பிரகாரம் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டது. தொடர்புடைய துறையில் உள்ள அனுபவத்திற்கு பதிலாக பணிப்பாளர் தரத்தில் உள்ள 3 வருட அனுபவத்தை கருத்திற் கொள்வதற்கான அங்கீகாரத்திற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்கள்திற்கு வேண்டுகோளொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | மேலே குறிப்பிட்டுள்ள பிரகாரம் |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | பொதுச் சேவையில் அல்லது பொது நிறுவனத்தில் முகாமைத்துவ நிலை பதவியின் 12 வருட சேவை அனுபவம் முகாமைத்துவ நிலையில் தேவைப்படல் வேண்டுமென்ற போதிலும், குறிப்பிடப்பட்ட தேவைப்பாட்டை பூர்த்தி செய்திருக்காத உத்தியோகத்தர் ஒருவர் 2017 ஆம் ஆண்டில் ரூபா 81,670 மாதாந்த சம்பளமொன்றுடன் குறிப்பிட்ட பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்தார். | நேர்முகத் தேர்வில் உயர் தகுதியை பெற்ற விண்ணப்பதாரர் உதவி பொது முகாமையாளர் (நிதி) பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டதுடன் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது. | மேலே குறிப்பிட்டுள்ள பிரகாரம் |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு பிரச்சனை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நாளதுவரையாக்கப்பட்ட நிறுவன அமைப்புக் கட்டமைப்பு அங்கீகரிக்கப்பட்ட பதவியணி, உள்ளவாறான பதவியணியின் விபரங்கள், வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் போன்ற தகவல்கள் வருடாந்த பாதீட்டின் அடிப்படையில் முன்னுரிமைகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட வேண்டும். செயல்படுத்தப்பட்ட காலச் சட்டகம் அந்த நடவடிக்கைகளின் எதிர்பார்க்கப்பட்ட வெளியீடுகள் / விளைவுகள் என்பன தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கை திட்டத்தினுள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. திறைசேரி ஏற்பாடுகளுடன் வரையறுக்கப்பட்ட நடவடிக்கைகள் மாத்திரம் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் கூட்டுத்தாபனத்தின் நிதிகளின் கீழ் மூலதனச் செலவுகள் வழங்கப்படுவது செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. செயல் நடவடிக்கைத் திட்டத்துடன் இணங்க கூடிய பிரகாரம் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான முன்னேற்ற அறிக்கைகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் ஆண்டுகளில் முன்னுரிமையை அடிப்படையாகக் கொண்ட நடவடிக்கை திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | செயல் நடவடிக்கைத் திட்டம் முறையாக தயாரிக்கப்பட வேண்டியதுடன் செயல் நடவடிக்கைத் திட்டத்துடன் இணங்கும் வகையில் முன்னேற்ற அறிக்கைகள் தயாரிக்கப்பட வேண்டும். |

### 4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு பிரச்சனை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 07 வருமான விடயங்களில் பாதீட்டு வருமானத்திற்கும் உள்ளபடியான வருமானத்திற்கும் இடையே 22 சதவீதம் முதல் 24 சதவீதம் வரையான வீச்சில் உள்ள பாதகமான முரண்களும் மற்றும் 32 செலவு விடயங்களில் 13 செலவு விடயங்கள் தொடர்பிலான முரண்கள் ; பாதீட்டு செலவிற்கும் உள்ளபடியான செலவிற்கும் இடையே 13 சதவீதம் முதல் 778 சதவீதம் வரையான வீச்சிலும் அவதானிக்கப்பட்டன. ஆகவே பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டு கருவி ஒன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கவில்லை. | ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டு கருவியொன்றாக பாதீடு பயன்படுத்தப்பட வேண்டும். |

### 4.3 சந்தைப் பங்கு

| கணக்காய்வு பிரச்சனை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| கூட்டுத்தாபனத்தின் சந்தை பங்கினை தீர்மானிப்பதற்கு சரியான நேரத்தில் சந்தை ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை மற்றும் போட்டியாளர்களிடையே அவர்களின் சந்தைப்பங்கு அதிகரித்ததா அல்லது குறைந்ததா என்பது பற்றி கூட்டுத்தாபனம் அறிந்திருக்கவில்லை. | சந்தை ஆய்வினை மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | சரியான நேரத்தில் சந்தை ஆய்வை மேற்கொள்வதற்கும் ஆயுர்வேத மருந்துப் பொருட்கள் தொடர்பான சந்தை பங்கினை இனங்காண்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 4.4 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

| கணக்காய்வு பிரச்சனை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதற்காக, அடைய வேண்டிய இலக்குகள் மற்றும் முன்னேற்றத்தை மதிப்பீடு செய்வதற்கான குறிகாட்டிகள் மற்றும் இடைவெளிகள் இனங்காணப்பட வேண்டிய இருந்த போதிலும், அவ்வாறான குறிகாட்டிகள், அடைவுகள் மற்றும் விலகல்கள் மற்றும் கவனம் செலுத்த வேண்டிய பல்வேறு துறைகளை கூட்டுத்தாபனம் இனங்கண்டிருக்கவில்லை. | இந்த விடயம் தொடர்பில் நடவடிக்கைகள் எடுக்கப்படும். | 2017 ஆகஸ்ட் 14 ஆம் திகதியிடப்பட்ட என்பீ/எஸ்பீ/எஸ்டிஜீ/17 ஆம் இலக்க பொருளாதார விவகாரங்கள் அமைச்சின் செயலாளரினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகளின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |